[illegible]

நிவிர்த்தித்து, எமது பக்ஷத்தை நிலைபெறச்செய்வாம்.

விஷ்ணுவைத் திரிமூர்த்திகளிலொருவராக வாண்டுக் கூறியிருப்பதன்றித் திரிமூர்த்திகளின் மேற்பட்ட நாலாவது மூர்த்தியாகக் கூறினதில்லை. ஆண்டு ஸ்ரீலட்சுமிபதியே பரதத்துவமென்கையால் அவரே நாலாவதுமூர்த்தியுமாதல்கூடுமெனின், இரண்டாவது மூர்த்தியும் நாலாவது மூர்த்தியும் ஒருவரேயாதல் யாங்ஙனம்? இரண்டாவது மூர்த்தி மூன்றாவது மூர்த்தியிற் குறைந்தவரும், நாலாவது மூர்த்தி மூன்றாவது மூர்த்தியி லுயர்ந்தவருமாகின்றமையால், தாழ்வு முயர்வுகளுமாகிய தன்மைகளை ஒரே மூர்த்தியினிடங் கூறுதல் கூடாது. இரண்டுதன்மையு மொருபொருளினிடத் தமையுமெனின், அப்போது விஷ்ணுவை யுயர்வாகக்கூறுவதில் ஸந்தோஷிப்பதுபோல, அவரைத் தாழ்வாகக்கூறுவதிலுஞ் சந்தோஷிக்கவேண்டியது. அவ்வாறு செய்ய நமது தோழரிசையாராகையால், இனி வேறு கதியே கற்பிக்கவேண்டும். அஃது, இரண்டாவது விஷ்ணுவும் நாலாவது விஷ்ணுவும், ஒரு விஷ்ணுவல்ல, வேறுவேறு விஷ்ணுக்களென்பதே. இந்த ஸித்தாந்தம் பாஞ்சராத்திரிகளுக் குடன்பாடாகாது. நமது பண்டிதர் ஸ்ரீசங்கராசாரியரது ஸித்தாந்தத்தையே தாமநுசரித்தவராகக் கூறியிருக்கின்றாராகையால்; இது சங்கரரது அபிமதமாகவேனு முடியுமோவெனின், சங்கரபகவத்பாதர் ஜீவேஸ்வர ஜகத்துக்களை மித்தையெனக்கொண்டு தமது பரமார்த்தஞானத்தில் நாலாவது பொருள் நிர்க்குணமாயிருப்பதொன்றாகிய நாமரூப ரஹிதமாவதெனநிர்ணயஞ்செய்திருத்தலால், அத்வைத ஸித்தாந்தத்துக்கும், அதனைப் பிரதிஷ்டிப்பித்த ஆசாரியரபிமதத்துக்கும் அது ஒவ்வாது. இதனால் நமது பண்டிதர் ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியர் நாமத்தை வெளியிற்கொண்டுவந்ததும் நிஷ்பலமாயிற்று. நிருபாதிகமாயிருப்பதொன்றையே அவர் விஷ்ணுநாமத்தால் ஸமர்த்தித்தாரெனின், நமது பண்டிதர் அப்போது விஷ்ணுவென்னுஞ் சொல்லுக்கு ஸகுணத்தி லர்த்தங்கிரகிப்பது கூடாது. அன்றியும், "ஸர்வபரிபூர்ணஸ்யவிஷ்ணோஸ்ஸர்வாங்கவிஹாரிணீம்" என்றந்நூலடக்கத்து ஓர் வசனத்தை யுதகரித்து, விஷ்ணுவினது சர்வாங்கத்தையும், அனந்தனையும், ஸ்ரீலட்சுமியையும், துளசியையும் நமது தோழர் பூஷித்ததும் அவலமாகும். இப்படி விசாரிக்கிறபோது நமது பண்டிதர் எந்தவழியிலுந் தப்பவிடமுண்டாகாமையால், அவர் விஷ்ணுவுக்கு நாட்ட முத்துலைப் போட்டு வருந்துந் துரியத்வம் நிலைதளர்ந்தழிந்தது. இப்படியழியவே, சுபாலோபவசனத்திற் போந்த விஷ்ணு பாரம்யம் பிரஹ்மாதிகளாகிய தம்மைக் கீழிட்டவர்களை நோக்கவென்றறியத்தக்கது. அவ்வளவேயன்றிக் குணருத்ரர், துரியருத்ரர் இவர்களை நோக்க அமையாதென்க. யாம் துரியருத்ரருக்கே பிராதான்யங்கூறினும், விஷ்ணுவை நோக்கக் குணருத்ரருயர்ந்தவரென்பதே யெமது கருத்து. இனி நமது பண்டிதர் காட்[illegible]

[illegible]நாராயணாம்சை ரஜோகுணப்ரதானே ॥" என்னும் வச[illegible]த்தை யாம் அழுந்தி விவகரிப்பது அநாவசியமாகத் தோன்[illegible]து. முன் வசனத்தை விசாரித்து யாம் முடிவுசெய்ததை[illegible]ர்ந்தபேர்க்கு, இதன் முடிவு சொல்லாமலே விளங்குமா[illegible] இம்மட்டி லிதை நிறுத்தினோம்.

[illegible]யம்,, என்று சுருதி வி[illegible]

[illegible]தஸ்மே[illegible]

[illegible]

ருத்ரனுக்குப் பிரஹமத்வம் நிலைக்காது எ
தைச் கொஞ்சம் பரியாலோசிப்பாம். மு
ஏவ-அத்விதீயம் என்னும் பதங்கள் அ
வ் து சுருதியில் ஏக-ஏவ-ருத்ர்விதீயம் என்னு
தன. இரண்டாவது சுருதியில் முத
சப்தம் அதிகமாயிருக்கிறது.
விரோதிக்கயாட்டாது. முதல் சு
வதின்றியும், ஏகாரத்தேற்றத்
திப்பதாயுமுள்ள ஓர் வஸ்து
வது சுருதியில் முதல் சுருதி
வஸ்துவை உருத்திரனெ
ஞல், இரண்டு சுருதிக
ஸத்தியமாயிற்று. இர
கூறிய ஆதிக்கியத்தை
மாத்திரமே யாம் துக்கிக்க
ல்லியது. மற்றென்றி
வது சுருதியில் உருத்தி
தியில விஷ்ணுவைச் சொ
மவருக்குச் கொஞ்சக் குண
வீண பொறுமைகொண்டு
டைக் கெடுக்க முயல்வத
லிமான்மியம் மிகப் பெர்
ஹவைநாராயண ஆஸீத்
இதில் ஏகயென்பதேயெ
லாமையால், இந்தச் சு
டொத்து வாழாது. இத
சேரத்தக்க
த்வத்தைப் பி
சப்தமும் ருத்ர
வம் கல்விதம்பிர
என்பதுமே சான்று
லஃ, என்னுஞ் சுருதி
வாராக. இப்படி ஒவ்வொ
து பண்டிதர்க்குச் சிவபார
ரியம் என்னுமுண்மையைப்
தெளிவிக்கின்றோம்.

அதர்வசிகையில் "ப்ர
விஷ்ணுப்ரசூதாகாரணம். கார
மத்யே" என்னும் வசனத்தால்,
இந்திரன் என்னுமிவர்கள் சிவனால்
னவும், அதனால், அவர்கள் காரணர்
ர்களெனவும் காரணர் சம்பு சப்தவா
ையே யாவரும் தியானமார்க்கத்தா லுபாசி
ம், அவர் தஹராகாசமத்யவர்த்தியாயிருக்கின்
டுகின்றது. அன்றியும், "த்ரிஷ-தாம
பாக்தாபோசஸ் சயத்பவேத். தேப்யோவி
ன்மாத்ரோஹம் ஸதாசிவஃ" என்னுஞ் சு
சானவ ரில் எது புஜிக்கத்தக்க

[illegible]

யை யடைந்தார்கள். ஆயி
ய் வேதசாஸ்திரங்களைகற்
ந்து மேற்றிசையார் கொள்
ன்று டல இங்கிலீஷ்படிப்
புரிந்து தேசாபிமானியாய்
°யென்றுஎண்ணியிருந்தோம்
ஸ்ரீநிவாச சாரியசுவாமிகளு
இச்சென்னையில்மாத்திரம்
னைவாசிகள் பலரும் அறிந்தி
ன்பாண்டியில் திருநெல்வே
த்துவசிகாமணி வெளிவந்து
கக் கேட்டு மிக மகிழ்ந்தேன்
டாம்பியென்னுமிடத்திற் றே
னசிந்தாமணி" யென்னும்
விக்கிரகாராதனத்தைப்பற்றி
பார்த்து அவரோ தென்னாட்டு
அவ்வித்துவான் தங்கள் பத்தி
யிலும் சைவவைணவ விதன்
த்தலைப் பார்த்து வெறுப்புற்ற
ய்துவரும் அம்முயற்சி அளவ
ஆகையால், இப்பத்திரிகை வ
ளும் விண்ணப்பம் யாதெ
களில் அவர் இஷ்டமுள்ளபடி
வனல்ல. கட்டாயம் தொ
ம் முதலியவற்றைக் காரண
நாட்டவேண்டும். ஆங்
ட்டத்தை அடக்கவேண்ட,
ஷயங்களை இப்பத்திரிகா
பத்திரிகையிலும் வெளி
ராதியோரை வெல்ல இ
நான் அவர்க்குச்செலுத்
வாராக. இனி இந்து
ட்டுப் புறமதங்களை

நண்பர்க்கும் ப

☞ இக்கனம் பண்
முயன்று வெ

சி

நமது பண்டி
சால் வில்லாமை

[illegible]

[illegible]

மாக மற்றையர் கொள்வார்கெ[illegible]
யது அவசியம். விஷ்ணுவெ[illegible]
ஈசுவரனென்பது சிவபெருமா[illegible]
ஸாதாரணரு மறிவார்களாகையா[illegible]
சிவனைக்குறிக்குஞ்சொல் இல்லை[illegible]
இருவர்கரும் ரூடியான இரண்டு[illegible]
ட்டமையால், சிவனுக்கே துரி[illegible]
மெனின், ஆதித்யோ என வொ[illegible]
யால், விஷ்ணுபரத்வஞ் சிதைந்[illegible]
று விலைத்தது. எங்கனமெனி[illegible]
வையாவது, வேறெந்தத் தேவ[illegible]
ருளாக வேதங் கூறுமை[illegible]
வேதங் கூறுகி[illegible]
[illegible]
[illegible]ருள் ஈசுவரசப்[illegible]
[illegible]டமொன்பதே திண்ணமாயிற்[illegible]
னம்” என்பதும் சிவ துரியத்தை[illegible]
து பண்டிதர் கூறினாரன்றோ? [illegible]
ல்லி ஸமர்த்திததாரா? ஈசா[illegible]
சாதிகளில் சிவனுக்குப் படித்த[illegible]
பது பண்டிதராயுள்ளபேரறிந்[illegible]
கிய இந்த நாமத்தைப் புரட்டித்[illegible]
லேற்றப் பார்ப்பது சுமக்கமுடி[illegible]
நாமம் “உதாம்ருதத்வஸ்யேஶா[illegible]
யோதிரவ்யய:” எனவும் “ஈ[illegible]
வும் போந்த உபநிஷத்துக்கள்வ[illegible]
பேருகும். தியானமார்க்கத்[illegible]
என்பதையே அந்த வசனந் தெ[illegible]
த்யேயப்பொருளென்பதை “சிவ[illegible]
சுருதியும் பலப்பிக்கின்றது. நா[illegible]
ணபோத்யாதா” என்று படிக்க[illegible]
ராகிய சிவனைத் தியானிக்கின்ற[illegible]
வெளியாகின்றனர். உபாசகரா[illegible]
ராகிய ஈசானரது நாமத்தை ஸ[illegible]
தவுண்மைகளரல் பூர்வபக்ஷியா[illegible]
இதுநிற்க.

சுபாலோபநிஷத்தில் [illegible]
எவன் விஷ்ணுவினிடமுள்ளான், [illegible]
என்று பொருள்விளங்கும் வசன[illegible]
உதகரித்தனர். இந்த வசனம் [illegible]
ஸாதகமுமாக முடிந்தது. எங்[illegible]
வுக்குத் திரிமூர்த்திகளி லொருவ[illegible]
வத்துபொருளாகுந் துரியத்வம் நி[illegible]
யே பரதத்துவமென்னும், ஏனை[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

—:(*):—

[illegible]

சள் அதிஷ்டான மூர்த்திகளாதலைப்
“அதாஸ்யபுருஷஸ்யசத்வாரிஸ்தானனிட
டம்|மூர்த்தார்தத்ரசதுஷ்பாதம் ப்ரஹ்மவி
மா, ஸ்வட்ரேவிஷ்ணுஸ்ஸுஷுப்தேருத்ர:
மானது தெரிவிக்கின்றமையாலும், இப்போது
த்துக்காட்டிய சுருதியில், மூன்றவஸ்தைகளைக் க
ன்றவஸ்தைகளுக்கும் சாக்ஷிமாத்திரமாயுள்ளது
த்துவத்தை ஸதாசிவநாமத்தால் பிரகாசப்படுத்தி
லும் நாலாவதாகிய துரியப்பொருள் பரசிவமேயென்
மரத்தாணியறைந்ததுபோல் நாட்டப்பட்டது. இந்த
யங்களாலும், நமமவர் பிரஹ்மோபநிஷத்தில் “விஷ்ணு
என்னும் பதம் வந்ததுகொண்டே விஷ்ணுவுககுத் துரியத்
ஸ்யர்த்தனர் தேடியது நிரஸ்தமாயிற்று. மேலுதசரித்து
காட்டிய அதர்வசிகையில் விஷ்ணுவை நகாரணமென்று பிர
ஷேதித்துத் துரியப்பொருளும் காரணப்பொருளும் சம்பு
சுத்தால் நிலைபெறுவித்ததலால், சிவபரஞ்சுடரே துரியப்பொ
ளென்பது சுத்தேசாக்ரமுடைய ஸாதுக்களுடைய துணிவ
ற்று. நமது வேப்பத்தூரார் விஷயசதி லிம்மட்டிலுபா
டைந்து மறுமஞ்சிகையில் நமது வலத்தூரார் விஷயத்
கொஞ்சமெடுத்தெசைக்கத் துணிந்திருக்கின்றோம். சுபம்.

ஸித்தாந்தீ.

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்: சஅஅஎ-வருஷ டிசம்பர்மீ ருஉ-வ சனிக்கி

சம்ஸ்கிருதபாஷை.

இதிகாசம். [முன்தொடர்பு.]

நாம்சொல்வது ஊகித்துப்பார்த்தால் இவ்விட
ல்லப்பட்ட விஷயங்களெல்லாம் மாபாரதத்துக்குள்
மாய் விளங்குவதில் தடையில்லை. அவைகளுள்ள
அறிந்தமட்டிற் காட்டுவாம். அஃதாவது, முதலிர
தராயணமுனிவர் அவதாரசரித்திரங் கூறுமிடத்து
ன் முன்னேற்றமையும், பின் வேதவியாசமுனிவரா
ட விபாகமும், அது நான்காய்ப் பிரிந்து நான்கு
வெளியிடப்பட்ட விர்ஷதயும் குறிக்கப்படுவதால்,
மும்; இதிகாசபுராணங்களின் உண்மை, பலவி
பொருந்திய பல சதைகளடங்கி, பல விரதங்கள்மு
ங்களைக் காட்டும் ஆநுசாணிகபருவத்திலும், தவத
பல மகரிஷி சரித்திரங்களாலும்; பிரம
மர் சரித்திரத்தாலும்; பூமியின் பிர
ம், க்ஷேத்திரசொரூ ...ம், ஆர
ண பிரவேசத்த ...சியர்
பர் தீர்த்த
[illegible]

[illegible]

டலத்தாலும்; யுகப்பிரமாணங்கள் நேரேயும் எடுத்துக்காட்டப்பட்டன. இருக்குமுதலிய வேற்றுமை வாதராயணர் பிறந்தபடலத்தால் வெளிப்பட்டதென்று முன்னரோ கூறினும். மெய்யறிவைக் கீதைமுதலியவற்றிற் காணலாம். நியாயம் [நீதி] இராஜதருமத்திலும், சிக்ஷை [குதிரைமுதலியவற்றைப் பழக்குதல்] விராடபருவத்திலும், சிகிச்சை [வைத்தியசாஸ்திரம்] ஆர்ஷ்டிஷேணராஜனும் தருமபுத்திரரும் சம்வாதம் செய்தவிடத்திலும், முக்காலநிலைமை ஆரண்ணியபருவத்தில் மார்க்கண்டேயர் வாக்கியத்திலும், தேவ மாநுடப் பிறப்பின் ஹேதுக்கள் "எவ்வித எண்ண முடையோனாய் மரிப்பனோ அவ்வித ஜன்மமே பின் அடைவான்" என்று தொடக்கிய கீதைமுதலியவற்றின் வசனங்களாலும், பரிபூரணவஸ்துவின் நிலை சஜாத்ஸஜாதீயம் முதலிய பலவிடத்தும் வெளிப்படுதல் காண்க.

இதுவரையில் நாம் பாரதத்தின் பெருமையை ஒருபான்மை சுருக்கி எழுதிமுடித்தோம். இனி ஸ்ரீ இராமாயணத்தைக் குறித்துச் சிறிது கவனிப்பாம்.

இராமாயணம்.

நண்பர்களே!

எம்போலிகள், நம் தேசத்தில் முக்காலத்திலவதரித்த மகாபுருடர்களியற்றிய மகாகாவியங்களின் விஷயங்களையுங் காலங்களையும் ஊகித்தெடுத்துரைக்க முயல்வது ஓர் பெருஞ் சாகசமாகவே முடியும். இவ்விஷயம் எவ்வித புத்திமான்களையும் ஒருவாறு மயக்குமென்பது யாவருமறிந்த விஷயமாயினும், இதுவிஷயத்தில் யாம் பெரியோர்வாயிலாகக்கேட்டறிந்தவைகளிலும் பிரமாணங்களகப்பட்டவரையிலும் எமது புத்திவலிமைக்கு எட்டியவரையிலும் சில விஷயங்களெழுதுவோமாயின், பெரியோர்களிடத்து வழிமாறுது விஷயங்களைக் கற்றுப் பிறர்க்குணர்த்த வலிமைபெற்ற பிறரும் இவ்விஷயங்களினருமைகளைத் தாமறிந்தமட்டில் எடுத்துக்கூறுவாரன்றே. அதுகொண்டே நாம் இவ்விஷயத்தில் முயன்றேம். இப்பொழுது நாம் எழுதிவரும் சம்ஸ்கிருதபாஷையின் பெருந்தொடரில் பிரகிருதமாய் நேர்ந்தது இராமாயணம். அஃது அநேக வேதவேதாந்தங்களை அடக்கிக்கொண்டிருப்பதென்றும், ஸ்ரீசதுர்முகன் திருவருட்பிரசாதம்பெற்ற வால்மீகமகாரிஷியா லியற்றப்பட்டதென்றும், வேதங்களுக் கடுத்த பிரமாணமென்றும், காவியங்களில் முதன்மைபெற்றதென்றும், பாரதர்களென வழங்கும் இந்துக்களுக்கு முக்கியமான கிரந்தமென்றும், சம்ஸ்கிருதபாஷையின் செய்யுட்களுக்கு உலகத்தில் முதல்வழியென்றுஞ் சொல்லப்படுகின்றது. இத்தேசத்தில் தற்காலம் அநேக நூல்களுக்கு இராமாயணமென்னும் பெயர் வழங்கிவருகின்றது. தத்துவசங்கிரகராமாயணம், வாசிஷ்டராமாயணம், அத்தியாத்மராமாயணம், அநுமத்ராமாயணம் முதலிய பல இராமாயணங்களிருத்தலறிக. இவ்விதமிருக்க, சில பௌராணிகர்கள் மூலமற்றதும், இன்னகாலத்தில் இன்னாராலெழுதப்பட்டதென்று நிச்சயமறியப்படாததும், பெரியோரெழுதிய பிரமாணகிரந்தங்களிலோரிடத்திலு மெடுத்தாளப்படாததுமான சஹஸ்ரகண்ட சதகண்டராவண இராமாயணங்களையும் இராமாயணமென்றே வழங்கிவருகிற[illegible]களை உற்றுநோக்கில் இது அவ்வளவு உண்மை[illegible]

[illegible]

கூடாதிருக்கின்றது. ஏனெனில், ஊருக்கூர் ஒவ்வொருவிதமாயும் ஏற்றத்தாழ்வாயுமிருப்பதனாலும், பண்டிதர்கள் கல்விக்கலப்பிருப்பதாயேற்படுகின்றமையாலுமென்க. சாதாரணயப் பார்ப்டவர்களுக்கு இப்பெரும் இராமாயணக்கூட்டத்தில் மேன்மைதங்கிய மகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய உண்மையிராமாயணத்தை எடுத்துக்காட்டுவது காச்சுககற்களிற் கலந்த கனகத்தை பெடுப்பதுபோல் மிகக்கடினமே. ஆயினும், இக்காலத்தும் உலகத்துப்பாக்கியமே யுருவெடுத்ததெனச் சொல்லத்தக்கவரும் அறிவிற் சிறந்தவருமான சில பண்டிதர்களிஞாயச்சுயி னுண்மை வெளியாமெனபதிற்குத் தடையில்லை. ஆதலால், பெரியோர்களுபதேசித்ததை உள்ளத்திலிருத்தி, கண்டகதைகளையெல்லாம் உண்மைப் புராணமெனக்கொண்டுவரும் புராணிகர் கோபத்தைச் சற்றுங் கவனியாது ஆதிகாவியமெனவழங்கும் நமது மேலான உண்மை யிராமாயணத்தை விசேஷமா யெடுத்தெழுதாவிடில், மேற்றிசையார் எழுதிய புத்தகங்களைப் படித்து அவர்கள் தாற்பரியத்தை நமது தாற்பரியமாய்க்கொண்ட நமது சகோதரர்கள் இப்புத்தகங்களின் அருமையறியாது இதைகளைக் கைவிட்டுவிடுவார்கள். நமது புத்தகங்களுஞ் சிலகாலத்து ளொளித்துப்போய்விடும். ஆதல்கொண்டே அவைகளைப்பற்றி எழுதவேண்டிய ஆவசியகம்நேரிட்டது. பண்டிதர்களே! இவைகளில் கொள்ளத்தக்கவைகளைக் கொள்ளுங்கள். தள்ளத்தக்கவைகளைத் தள்ளுங்கள். நாம் மகாபாரதத்தைக்குறித் தெழுதிவருமிடத்து அப்பாரதமெழுதிய காலம் சுமார் 5,000-வருஷ மிருக்கலாமென்றும், அதற்கு முற்காலத்திலேயே இராமாயண மெழுதப்பட்டதென்றும், அதற்கு மாறாக மற்றவர் சொல்லுங் காரணங்களுக்கு மறுப்பு அவ்விடத்திலெழுதியிருப்பதையும் யாவருமறிந்திருப்பார்கள். இதற்கு இராமாயணமெனப் பெயரிட்டது மிகப் பொருத்தமுடையதே. ஏனெனில்; [இராம-அயன] இவ்விரு பதங்களுஞ் சேர்ந்து இராமாயணமென்கிற பதம் உண்டாயிற்று. அயனமென்பது இருப்பிடமெனப் பொருள்படும். இராமனுக்கு அயனமெனப்பதால், இராமசரித்திரத்தை யெடுத்துக்காட்டும் ஓர் கருவியேயாம். மேலும்; இராமாயணமென்னும் பதத்திற்கு வால்மீகியின் கருத்தின்படி அடியில்வரும் பொருள்களையுங் காண்க. [க] இரகுவம்சஸ்தரை இரகுக்களென்று சொல்வதுபோல், இராமன்வரையிலுள்ள இராமன் முன்னோர்களிற் சிலர் சரித்திரமுமிதிலடங்கியிருப்பதுகொண்டு இதற்கு [இராமர்களுக்கு அயனம்] இராமாயணம் என்றாயிற்று. இதற்குப் பிரமாணம் "இரகுவம்சத்தின் சரித்திரத்தை மகரிஷி யெழுதினர்" என்னும் பாலகாண்ட சுலோகமேயாம். [உ] இராமாயணமென்னுங் காவியமுழுவதும் சீதையின் சரித்திரம்" என்று அவ்விராமாயணத்திற்றானே காணப்படுவதால், இராமாயணமென்பது சீதாசரித்திரமெனவும் பொருள்படும். [இராமா ஓர்பெண். அயனமென்பது முன்போலவே கொள்க.] [௩] "சச்சிதானந்தரூபமான எவ்வஸ்துவை யோகிகளுள்ளத்திலிருத்திக் களிகொள்வார்களோ அப் பரப்பிரமமே இராமனெனப்படும்" என்னும் உபநிடதத்தை ஆராய்ந்த சில பெரியோர்கள், திரடர்ந்தமான பிரமப்பொருளை யெடுத்துரைக்கும் புத்தகம் இராமாயணமென்பர். [இராமன், பிரமம்; அயனம் முன்போல்.] இவற்றால் முடிந்ததுயாதெனில், ஸ்ரீராமனையும் அவனைச் சார்ந்தவர்களையும் குறித்த சில சரித்திரங்களடங்கிய ஓர் புத்தக

[illegible]

ம் இஃதென்பதாம். இவ்விஷயத்தில் தெளிவாய் எழுதிய காலம் வெளியாகாமற்போயினும், அது ஊகித்தறியும்வழி மேலே காட்டப்படும். இதனைப் பலவிடங்களில் காவியமென்றே சொல்வது வழக்கம். அஃதெங்ஙனமெனில், "இராமாயணமென்னுங் காவ்ய முழுதும சீதையின் பெரிய சரித்திரம்" என்றும் "இராமாயணகாவியம் முழுவதும் இவ்விதமே செய்வோம்" என்றும், "மகாமேதாவியாகிய முனிவர் இப்பெரும் புகழ்பெற்ற ஸ்ரீராமன் புகழை விளக்க சமாக்ஷரங்களான பல ஆயிரம் சுலோகங்களால் ஓர் காவியத்தைச் செய்தார்,, என்றும், [சமாக்ஷரமென்பது சமவிர்த்தமென்னும் ஓர்வித யாப்புக்குப் பெயராதலால், இதிலுள்ள செய்யுட்களெல்லாம் அவ்வித யாப்புள்ளனவென்றே கொள்ளற்பாலது.] "வால்மீகியென்னும் முனிவர் அக்காவியத்தின் பிற்பக்கில் சிலவற்றை யுரைத்தார்,, என்றும், சுவர்க்கலோகத்தில் தினமும் இராமாயணகாவியத்தைக் கேட்கின்றார்கள்,, என்றும் இராமாயணத்திலே பலவிடங்களிலு மிருப்பதாலும், "இராமாயணமும் பாரதமும் ஆதிகாவியமும் இதிகாசமுமாம்,, என்று வேறு புராணத்திலு மிருப்பதாலுமென்க. இது காவியங்களில் முதன்மைபெற்றதென்பது முழுதும் செய்யுட்களால் நிறைந்த புத்தகமொன்றும் இதற்கு முன் இல்லாமையினாலேயேயாம். அதுகொண்டே இதற்குமுன் பாரதமுதலிய வேறு புத்தகங்களில்லையென் றறியக்கூடும். பாரதம் காவியமாயினும் அது முக்கியமாய் இதிகாசமென்றே வழங்குவதுபோல், இது இதிகாசமாயிருப்பினும் இதைக் காவியமென்றே பெரும்பாலும் வழங்கப்படும். பாரதத்தைச் சிலவிடத்திற் காவியமென வழங்கியதுபோல, இதையும் இதிகா[illegible]மென்னுஞ் சொல்லுக்குப் பரியாயமான ஆக்கியானமென்னும் பதத்தால் விவகாரமுண்டு. "ஆயுளைக் கொடுக்கத்தக்க இவ்விராமாயணமென்னு மாக்கியானத்தை மனிதன் படிப்பான்,, என்றும, முதலிலும் முடிவிலும் "இவ்வாக்கியான மாயுளைக்கொடுக்கும்,, 'இவ்விதம் முன் நடந்த வாக்கியானம்,, என்று மிருப்பதைக் காண்க. பாரதத்தி லிதிகாச விலக்கணங்கள் வெளிப்படையாயும், காவியலக்ஷணஞ் சிறிதாகவு மிருப்பதுபோல், இது காவியலக்ஷணம் பூரணமாயும் இதிகாசலக்ஷணஞ் சிறிதாயுமிருக்கின்றது. இதுவே இத்தேசத்திலுள்ள காவியவிலக்கணங்களுள் முதன்மைபெற்ற விலக்கணம். அதுகொண்டே பாலகாண்டத்தின் நான்காவது சர்க்கத்தில் "சிருங்காரமுதலிய ஒன்பது ரஸங்களுங் கூடிய இக்காவியத்தைப் பாடினர்,, என்றும், இரண்டாம் சர்க்கத்தில் "சொற்சுவை பொருட்சுவை நிறைந்த விக்காவியத்தைச் செய்தருளினர்,, என்றும் எழுதப்பட்டிருக்கின்றது. இனி வேறு விஷயத்தைக் கவனிப்பாம். இவ்விடம் சிலர் செய்யும் ஆட்சேபங்களான;—இது பாரதத்திற்கு முந்தியதேனும் சொற்பகாலமே முந்தியதாக விருக்கவேண்டும். ஏனெனில், கிஷ்கிந்தாகாண்டத்திலே சநு-வது சர்க்கத்தில் வானரர்களைப் பார்த்துச் சுக்கிரீவன் சொல்லுமிடத்தில் "பாஞ்சாலம், பாதம், குருமத்திரகம்,, என்று சில தேசங்களின் பெயர்களில் குருவென்னும் பெயரு மிருக்கின்றது. குருவென்னுமாசனே சந்தனுவென்னு மரசனுடைய பிரபிதாமகன். அவன் பெயரைக்கொண்டே அத்தேசத்திற்குக் குருவென்னும் பெயராயிருக்கலாம். இதற்கு ஒருசமயஞ் சமாதானமளித்தபோதிலும், அதற்கு முதற் சர்க்கத்தில் துவாபரயுகவிறுதியிற் பிறந்த ஸ்ரீகிருஷ்ணன் வசனத்தைக் காட்டும் ஓர் வசனமிருக்கின்றது

[illegible]

அஃதியாதெனில், "அவ்விடம் பஞ்சஜனன், ஹயக்கிரீவனென்னும் அசுரர்களிருவரைக் கொன்று சங்கத்தையும் சக்கரத்தையும் புருஷோத்தமன் பெற்றார்,, என்பதாம். இவ்விடத்தில் அதற்கு முந்தியே கிருஷ்ணவதாரமென்று சொல்லி ஓர் வழி காட்டக்கூடாது. ஏனெனில், விஷ்ணுபுராணம் உஅ-ம துவாபரயுகமென்று இக்கலிக்கு முந்திய துவாபரத்தையே கிருஷ்ணஜனனகாலமாகக் காட்டுகின்றது. அவ்விஷயம் பாகவதத்திலுமிருக்கின்றது. கிருஷ்ணன், இறந்துபோன தமது குருபுத்திரனை மீட்கப்போய் வழியில் பஞ்சஜனசுரனைக் கொன்று சங்கத்தைப் பெற்றானென்றுங் காணலாம். அவ்விஷயத்தைப் பாகவதசித்தாந்தசந்திரிகையையெழுதியபுராணம் ஹயக்கிரீவசாஸ்திரியுமொப்பியிருக்கின்றார் என்பது. இவ்விஷயத்தில் சமாதானம் வருமாறு காண்க. நாம் முன் எடுத்துக்காட்டிய காரணங்களால் இராமாயணம் பாரதத்திற்கு முந்தியதென ஏற்பட்டும், பாரதத்தைச் செய்த வேதவியாசர் பிதாவான பராசரர் இராமாயணகாலத்திலிருந்ததாகத் தெரிவதால், இவ்விரண்டிற்கும் மத்தியகாலம் சொற்பமாகவேயிருக்குமென்று ஊகிக்கக்கூடியதாயினும், அவர்கள் யோகிகளும் நீண்ட நாள்களைப் பெற்றவர்களுமாதலால், அதைக்கொண்டு ஒருவிதமாய் நிச்சயிக்கக்கூடாது. குருதேசமென்கிற பெயர், குரு என்னுந் தேசப்பெயரிருப்பதும் ஒரு காரணமாகாது. அத்தேசத்திற்குக் குருவென்னும் பெயர் அநாதியாயுள்ளதே. அவ்வரசன் பிறந்த பிறகு குருஜாங்கலமென்னும் பெயர் அதற்கு வந்ததாய்மாத்திரம் பாரதத்தின் ஆதிபருவத்தில் "அவர் பெயரால் குருஜாங்கலமாயிற்று,, என்றிருக்கின்றது. (ஜாங்கலமென்பது சீர்திருத்திய ஓர்வித நாட்டுக்குப் பெயர்.) அதுகொண்டே "குருக்ஷேத்திரம் அவன் தவத்தால் புண்ணியம் பெற்றது,, என்று உடனே எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் குருவென்ற பெயர் அநாதியென்று ஏற்படுகின்றது. ஆதலாற்றான் தரிசனோபநிஷத்திலும் குருக்ஷேத்திரமென்கின்ற பதமிருக்கின்றது. அவ்வரசனுக்குப் பிந்தியே உடனிடதந் தோன்றியதாய்ச் சொல்வதும் அவ்வளவு யுக்தமன்று. ஆதலால், ஓர் காலநிர்ணயஞ்செய்தல் முடியாதென்க.

இரண்டாவது காரணத்தை விசாரிக்கப்புகுவோம். அதற்கு யாம் சமாதானமுரைக்குமுன் பாகவதசித்தாந்த சந்திரிகை முதலிய சில புத்தகங்களையெழுதி தாம் பெரியோரிடஞ் சரியாகக்கல்வியைக் கற்றவரென்றும், பலவிடங்களிலெழுதி பரதன் பெரியவனா, பற்றவன் பெரியவனா வென்ற பல ஆக்ஷேபங்களைக்கிளப்பி அவைகளுக்குச் சமாதானமளித்து கிருஷ்ணன் இக்கலியின் முதற்றினத்திலே பரலோகமடைந்தாரென்று எழுதிமுடித்தார். அவரிவ்வாக்ஷேபத்திற்கு யாது சமாதானங்கூறுவரோ அறியேம். யாமறிந்த மட்டில் இதுவே சமாதானம். முன்பு புராணங்களைப்பற்றி யெழுதியவிடத்தில் புராணங்கள் பல அர்த்தவாதங்களால் உண்மையை விளக்குங்காவிகளென வெழுதினோமல்லவா? அவ்விதமே பாகவதமும் பகவானுக்கு நித்தியமாயுள்ள சங்கதாரணத்தை அவ்வவ்வவதாரத்தின் கதைவாயிலாக வெளிப்படுத்தியதே தவிர வேறில்லை. அதுகொண்டே ஆக்னேய புராணத்தாலும், வேறு பெரியோர்கள் வசனத்தாலும் பகவானுடைய திவ்விய சரித்திரங்கள் ஒவ்வொரு காலங்களிலுமுள்ளதாகவே நம்பப்படுமென்று வெளியாகின்றது. உலகம் அடிக்கடிமாறிப் பலவேற்றுமைகளைப்பெறுவதால்

[illegible]

— [illegible]

[illegible]

[illegible]

அநேக ஏற்பாடுகளை முன்போலத் திருப்பவுங்கூடும். ஆனால் அவைகள் சிலபாகங்களில் வேறுபட்டிருக்குமெனின், அவதாரமூர்த்திகளின் சரித்திரமும் அவ்விதமே சிலபாகம் வேறுபட்டிருக்கின்றது. இவ்விடம் சுக்கிரீவன் சொன்னதாக வெடுத்துக்காட்டிய வசனமும், கிருஷ்ணனுடைய சரித்திரத்தையே குறிக்குமென்பதும் நிச்சயமாய்த்தெரியவில்லை. அயக்கிரீவன் என்னுமசுரனைக்கொன்று சக்கரத்தைக் கொண்டுவந்ததாக அவர் சரித்திரத்தால் காணப்படவில்லை. ஆதலால் பஞ்சஜனசுரனையும, அயக்கிரீவாசுரனையும் சம்ஹரித்து ஸ்ரீமந்நாராயணன் சக்கரத்தைப்பெற்றது பாகவதத்திற் சொல்லிய கதையாவென்று நம்பத்தக்கதாயில்லை அதற்கு யாம் வேறுவழியுள்ள கதைகளையுங்காரணங்களையும் பின்னெடுத்துரைப்பதுடன்கூட, பல சூட்சுமகாரணங்களா லிதன் காரணத்தையு மெடுத்துரைப்பாம்.

இன்னும்வரும்.

நம்மவருக்கு ஆவசியகம் வேண்டியது யாது?

விவேகிகளே!

இவ்விதக்கேள்வி வைதிகர்கள் கூட்டத்திலும் லௌகிகர் கூட்டத்திலும் ஆங்காங்கு வெளியாகிவருகின்றது. இதற்குச்சமாதானமும் பற்பலவிதமாய் ஆலோசித்து மேதாவிகளாற் சொல்லப்பட்டது யாதெனில், நம் தேசத்திற்குத் தற்காலம் உபயோகமுள்ளதும், மதம், ஆசாரம், பொருள், தைரியம், தேகபலம் முதலிய யாவற்றையுங் காப்பாற்றக்கருவியாய் நின்றுள்ளதும் உபந்நியாசமே. அனேக தேசாந்திர சரித்திரங்களையும், நம்தேசத்துப் பூர்வாசிரியர்சரித்திரங்களையும் கற்றவர்கள் இதை அறிந்தவிஷயமே. பற்பலவிதங்களான ஜனங்களினுள்ளங்களை க்கவர்ந்து ஓர்வழியிற் செலுத்துவது வேறுவழியால் முடியாது. பரோபகாரசிந்தை, பண்டிதர்களி னிலக்ஷணமல்லவா? அவரது கருணைப்பெருவெள்ளமே பாமரர்களுக்குப் பாக்கியமாய்முடியும். உலகத்தில் தன் வயிற்றை நிரப்பி வீட்டைவிட்டகலாது தன் பெண்டீர்களுக்கும் பிள்ளைகளுக்கும், அல்லது பந்துக்களுக்கும் சுகமளிப்பவர் பண்டிதராவார்களோ? இவ்விலக்கணம் பூண்ட மகான்களவதரிக்கவா உலகமெதிர்பாக்கும். பாமரர்களுக்கு அனுக்கிரகஞ்செய்யத்தக்க நாவலிமை பூண்ட ஓர்மகான்மா அவதரிக்கவல்லவோ உலகமெதிர்பார்க்கும். அன்னியர்களுக்கு அறிஞர்களனுக்கிரகம் அவசியமில்லையே. மற்றவரல்லவோ பண்டிதர் எடுத்துரைக்கும் விஷயங்களை எதிர்பார்ப்பவர். பண்டிதர் தாமறிந்ததும், தாமனுபவிப்பதும், அனுபவிக்கத்தக்கதுமான சுகத்தை ஏனையோர்களுக்கு எடுத்து வெளியிடாரேல், அவர் பெயர்மாத்திரையில் பண்டிதரென்பது உண்மை. உலகத்தில் ஓர் சித்திரிகன் சித்திரமெழுதாவிடத்து எங்ஙனஞ் சிற்பியெனப்படுவான். அவன் பலரறிய ஓர் சித்திரத்தை வரைவானாயின் அவனுக்கு அப்பெயர் வழங்கிவரும். அங்ஙனமே ஓர் பண்டிதன் தமது ஞானத்தைப் பிறர்க்குபயோகப்படுத்தாவிடின், ஒருபோதும் பண்டிதனெனச் சொல்லப்படான். உலகத்தில் எவ்வளவு சோம்பலுடையவனாயினும், தன் வயிற்றைப் பெரிதாயெண்ணினவனாயினும், தன்னினத்தாரையாவதரியாதும் அவருள்ளமுந் தம்முள்ளமும் கலக்காதும் ஒருபொழுதுஞ் சுகமடையான். உலகத்தில் தான் உபயோகப்படு

[illegible]

த்திக்கொள்ளாமலும் மற்றவர்களுக்கு ஈயாமலும் பணத்தைச்
சேர்ப்பவனைப் பலரும் நிந்திப்பதுபோல், பண்டிதனும் மற்ற
வர்களுக்குத் தன் அறிவைப் புகட்டாவிடில், அவன் பலராலும்
இகழப்படுவனேயன்றி ஒருக்காலும் ஒருவராலும் புகழப்பெறு
ன. அதுகொண்டே நம்முன்னோர்களாகிய மதாசாரியர்கள்
பிரசங்கத்தாலன்றி வேறுவழியால மற்றவர்க்குத் தத்துவம்
விளங்காதென்றெண்ணி, அவ்விதமே யுபதேசித்துவந்தனர்.
ஆதலினாற்றான் இராச்சியம் நன்னிலைமை யடையும்பொருட்டு
மனுமுதலிய பெரியோர்கள் வைதிக லௌகிகவிஷயங்களைப்
பெருங்கூட்டத்திற்றான் வெளியிட்டனர். நம்மவரோ வை
திக லௌகிகமாகிய சாவகாரியங்களிலும் சபைகளை முன்னிட்
டே எல்லாவற்றையும் நிறைவேற்றிவந்தனர். இப்பொழுது
நமது உபாத்தியாயர்கள் பொருளில்லாததேனும் சபை [பரி
ஷத்] என்னுமோர் சொல்லை ஒவ்வொரு கருமத்தின் தொடக்க
த்திலும் ஓர் மனிதனை வைத்தாவது சொல்லிக்கொண்டுவருகி
றார்கள். சபைகள் சேரவேண்டியதற்கே பெருமபாலும் ஆல
யங்கடோறும் சபாமண்டபங்க ளேற்பட்டிருக்கின்றன. நம
முன்னோர்கள ஏற்படுத்திய ஏற்பாட்டைச் சற்றுநோக்கில்,
மற்றவர் வழியை ஒருவரும் புகழத்துணியார். ஆயினும், அவ்
வித வழக்கம் நடுநாட்களிற் பிறந்த சிலரால் கைவிடப்பட்டது.
அதனா லுண்டாகும் ஒற்றுமை நமக்கின்றியமையாததாம். அவ்
வொற்றுமை மூன்றுவிதமாய் நம்தேசத்தில் நிலைபெற்றிருந்த
தாய் முன்னோரெழுதிய புத்தகங்களால் வெளியாகின்றது. அ
தில் முதலாவது இராஜகாரியங்களி லாவசியகமானது. இரண்
டாவது, மதகாரியத்தில். மூன்றாவது, தனித்தனியே ஒவ்
வொருவரும நற்கதியடையவேண்டிய விஷயத்தில் மோக்ஷத்
தை விரும்புவோர்க்கும் ஒற்றுமையில்லாது கூடுவதில்லை. அவ
ர்க்கும் குருசிஷ்ய ஒற்றுமை ஆவசியகமன்றோ. இவ்வித ஒற்
றுமைகளை உண்டாக்குவதற்குத் தமதுள்ளத்திற்றோன்றிய கரு
த்துக்களை மற்றவரறியும்படி பெருங்கூட்டங்களிற் பிரசங்கிப்ப
தைவிட வேறுவழி யாதுமில்லை. அவ்விதம் ஒருவன் செய்யி
ன் அறியாதவிஷயங்களை மற்றவர்களுக்கு அறியப்படுத்தவும்,
அறிந்தவிஷயங்களை உறுதியாக்கவும இதுவே பெருங் கருவியாக
ஏற்படும். நம்முன்னோர்கள் மூவகையொற்றுமையையும் காப்
பாற்றிய வழியையும், அவைகளுக்கென்று செய்த உபாயங்க
ளின் சிறப்புகளையும காட்டுகின்றோம். நாம் முன் சொல்லிய
மூன்றுவித ஒற்றுமைகளில் இராஜரீகவிஷயங்களுக்காக மதஜா
திவேற்றுமைகளை யெண்ணாமல் ஒன்றுகூட்டுக் காரியங்களை மு
டிப்பதில் நம் முன்னோர்கள் வழக்கமென்பதில் உதாரணமாக
இராமாயணத்தில் ஓர் சங்கதியை எடுத்துக்காட்டுவோம். இரா
மாயணத்தில், தசரதமகாராஜன் தனது புத்திரனுக்குப் பட்டா
பிஷேகஞ்செய்யவுத்தேசித்து, அவ்விஷயத்தைப்பற்றி ஆலோ
சிக்கக் கருதி ஓர் பெரிய கூட்டங் கூட்டியதாய்ச் சொல்லப்பட்
டிருக்கின்றது. அந்தக் கூட்டமும் அதில் நடந்த விஷயங்க
ளும் இக்காலத்தில் நடக்குங் கூட்டங்களிலுஞ் சிறந்ததாகத்
தெரியவருகின்றது. எங்ஙனமெனில், முதலில் "பலவிடங்க
ளிலுள்ள பற்பல் அளவற்ற ஜனங்களையும், மகா அரசர்களை
யும் தனித்தனியே அழைப்பித்தான்" என்பதால், அவர்களை
அழைத்த சிறப்பும், "அவ்வரசர்கள் அனைவரும் தத்தமக்களிக்
களிக்கப்பட்ட ஆசனங்களில் அரசனை நோக்கி வீற்றிருந்தனர்"
என்பதால், உட்காரவேண்டிய ஒழுங்கும், "அரசர்களும் அங்

[illegible]

நகரத்தாரும் பிறநகரத்தாரும் அரசனுல் வெகுமானிக்கப்பட்டுச் சமீபத்தில் சூழ்ந்திருந்தார்கள்" என்பதால், அரசன் அவர்களைச் சமீபத்திலே தாரதம்மியமின்றி ஆதரித்ததும், சபையாரனைவரையும நோக்கி அநுமதி கேட்டான்,, என்டதால், ஒவ்வொரு உபந்நியாசத்தின் ஆரம்பத்திலும் சபையோர்களையழைக்கும் வழியையும், "எல்லோரும் அறியத்தக்க உரத்த சத்தத்தோடு,, என்பதால், மற்றவர் கேட்கததக்கபடி சொல்லும் கெம்பீரத்தனமையையும், "சபையார்களே இது தாங்களறிந்த விஷயம்,, என்பதால், ஆரம்பத்தினினிமையும், பின் விஷயங்களையும் எடுத்துககாட்டி, "நான் இப்பொழுது எடுத்துரைத்த விஷயம் உசிதமானுல் அதைத் தாங்கள் ஒப்பவேண்டும், இல்லாவிடில் எனககு வேண்டிய வழியை எடுத்துக்காட்டவேண்டும்,, என்று முடிவில் ஜனங்களிடம் விண்ணப்பஞ்செய்துகொண்டதால், தன் தாற்பரியத்தைத் தான் நம்பாது அவ்விஷயத்தில் மற்றவர் பலர் தாற்பரியங்களையும் அதற்கிணையாய்ப் பிரார்த்தித்ததும் "இது எனது தாற்பரியம் உலகத்திற்கினமானது வேருயின் அதைத் தாங்கள் உரைக்கவேண்டும். நடுவுநிலைமைகொண்டு ஆலோசித்தாற்ருன் உண்மை வெளிப்படும். ஆக்ஷேபஞ்செய்து தீர்ந்தவிஷயமே அதில் பலமுள்ளதாகும்,, என்று தெளிவாய் ஜனங்களைக்கேழ்க்கும் வழியும் "இவ்விதம் அரசன் சொல்ல, மிகவும் ஜனங்கள் அதை யாமோதிததார்கள்;, என்பதால், ஓர் பிரசங்கத்தின் முடிவில் கேட்போர் சொல்லுமுறையும், "சகல இராஜகுணமும் பொருந்திய ஸ்ரீ இராமன் எங்களுக்கரசனு யிருக்கச்சம்மதம்,, என்று ஜனங்கள் சம்மதிகொடுத்த சிறப்பும் "நான் இராச்சியத்தை நியாயமாகப்பரிபாலனஞ்செய்திருக்க, நான் சொல்லிமுடிப்பதற்கு முன்னரே என் குமாரனை அரசனுயிருக்க விரும்புகிறீர்களே, நான் ஏதேனும் அநியாய முக்கட்குச்செய்தேனே,, என்று கேட்டதனுல், தன் குற்றத்தைத் தான் தீர்க்கவேண்டிய ஒரு மேலான எண்ணமும், "இக்ஷவாகுவம்சத்திற் பிறந்தவனுள் இவ்வளவு சர்வவல்லமையும் டொருந்திய வேறு ஒருவருமில்லையாதலால் இவரே எங்களுக்கரசராகவேண்டு" மென்று ஜனங்கள் சொல்லியதால் அரசர்களில் நீதியின் பெருமையும் "அவர்கள் அஞ்சலி வந்தனம் செய்தார்கள்,, என்பதால் கேட்பவர்கள் பிரசங்கத்தின் முடிவிற் செய்யவேண்டிய முறையும் "அவர்கள் வந்தனத்தை ஏற்றுக்கொண்டு அரசன் அவர்களுக்குசிதமான உத்தரமளித்தான்,, என்பதாற் பிரசங்கியார் செய்யவேண்டிய தொழிலும், "அரசன் உபந்நியாசம் முடிந்தவுடன் ஜனங்கள் சந்தோஷத்தாற் பெருங்கூச்சலிட்டார்கள்,, என்பதால் பிரசங்கத்தின் முடிவில் ஜனங்கள் களிப்பும், "கீழ்த்திசை, தென்றிசை, மேற்றிசை முதலியவிடத்து அரசர்கள் மிலேச்சாசிரியர்கள், மலைநாட்டார்கள், காடுகளில் வசிப்பவர்கள், மற்றும் அனேகர் அச்சபையில் நிறைந்து, தேவர்கள் தேவேந்திரனைச் சூழ்ந்ததுபோல் சூழ்ந்துநின்ருர்கள்,, என்பதாலும், "வசிஷ்டரும் வாமதேவரும் அங்கிருந்தார்கள்,, என்பதாலும், அச்சபையில் மிலேச்சர் பிராமணர்முதலிய எல்லோருமிருந்தார்களென்று வெளிப்படுதலால், இராஜகாரியங்களிற் சபைசேரவேண்டிய முறைமையும் நன்ருய் வெளிப்பட்டது. இனி இரண்டாவது ஒற்றுமையைப்பற்றி விசாரிப்பாம். இப்பரதகண்டத்திற் பிறந்த முதல்வருணத்தார்முதல் ஐந்தாம் வருணஸ்தர்வரையில் அதிகாரங்கள் ஒவ்வொருவர்க்கும் வேறுப

[illegible]

டினும், மதங்களைக் காத்தல் யாவர்க்கும் பொதுவான தொழிலென்று ஏற்படுகிறபடியால், அதுவிஷயத்தில் செய்யும் பிரசங்கங்களில் இந்துக்கள் எல்லோரும் கேட்டற்குரியதொன்று எமது துணிபு இவ்விஷயமொன்றே, ஆகமங்களின் இரகசியங்களைக் கற்றுணராது தற்புகழ்ச்சிக்குறைவைத் தடையாயெண்ணும் நம் பண்டிதர்கள் ஒப்பார்கள். இதுவிஷயம் நாம் புதிதாக எடுத்துச்சொல்லவில்லை. பாகவதம் முதலிய கிரந்தங்களிலும் பல புராணங்களிலும், சூதர் உபதேசிப்பவரும் ரிஷிகள் கேட்பவருமா யிருந்ததை எடுத்துக்காட்டுவோமாயின், நம் பண்டிதர்கள் அதைகேட்டுச் சொல்பவர்களை நாஸ்திகரென்று திட்டுவார்களே தவிர வேறொன்றும் அறியார். பண்டிதர்களே! ஆகம இரகசியங்களை அறியுங்கள், "ஸ்திரீகள், சூத்திரர், தாசர்கள் இவர்களுக்குச் சம்ஸ்காரம் வைணவத்திலுண்டு" என்று பாகவத வசனங்களை அறியுங்கள். "பஞ்சமருக்கும் திருநோக்கதீக்ஷையுண்டு,, என்னும் சிவாகம உண்மையை உணர்ந்து தெளியுங்கள். அவர்கள் வைதிககர்மங்களி லதிகாரிகளல்லவென்று நீங்கள் எண்ணினால், அவர்களுக்குப் புராண தர்மங்களையேனும் போதியுங்கள். இனியேனும் நான்காம்வருணத்தவருள் உங்களுக்குள்ள துவேஷத்தையெல்லாம் அகற்றுங்கள். அவர்களுக்கு உசிதமாய் ஆகம புராண இதிகாசங்களிலுள்ள வதிகாரங்களை வெளியிடுங்கள். இன்னும் துராக்கிரகத்துடன் மற்ற வருணத்தவரை ஆதரிக்காம லிருந்தால், சிறிதுகாலத்திலே நமது மதம் முற்றிலும் ஒழிந்துவிடும். அல்லது அவர்கள் குருவும் நீங்கள் சிஷ்யருமாக நேரினும் நேரும். வைதிககருமங்களில் அவர்க்கு அதிகார முண்டோ இல்லையோவென்று விசாரித்தற்கு இது காலமல்ல. நாஸ்திகம், கிறிஸ்துமதம், அஞ்ஞானம், அசிரத்தை முதலியன ஓங்கி வளரும் இக்காலத்தில் நமது ஆசாரம் முற்றிலும் நிலைபெறவ தரிதாகும். இனி நம் பண்டிதர்கள் வெளிவந்து பிரசங்கவாயிலாகப் பிறமதக் குற்றங்களையும் நம்மத மேன்மைகளையும் வெளியிடாதொழிவராயின், இம்மதம் அழிந்துபோதற்குத் தடையென்னை? ஆசாரத்திற்குச் சிறிது குறை நேரிடினும் ஆபத்துக்காலத்தில் தோஷமில்லை. அதுகொண்டே நம்முன்னோர்களும் அவ்விதம் அனுட்டித்தார்கள். பாருங்கள்! நமது தேசத்தில் ஜகத்குருவெனப் பெயர்பெற்ற ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் பௌத்தர், நாஸ்திகர், பாஷண்டர் முதலாயினோருடன் வாதித்து அவர்களுக்கு மதவுண்மைகளைப் போதித்து அவர்களை அத்வைதிகளாக்கினமையை அவர் சரித்திரங்களில் நீங்கள் கண்டதில்லையா? அவ்விதம் ஸ்ரீமான் இராமாநுஜமுனிவரும் திருக்கோட்டியூரில் யாவரும் கேட்கத் திருமந்திரார்த்தோபதேசம் புரிந்தமையும், அது விஷயத்தில் அவருக்கும் அவர் குருவுக்கும் நடந்தசம்பாஷணையைப் பற்றியும்சிறிதும் நீங்கள் கேட்டதில்லையா? ஆதலால் இக்காலத்து யாதும் விசாரியாது வெளிவந்து மதத்தை நிலை நாட்டுங்கள். இக்காலத்திலோ உதங்கமுனி போன்ற சிஷ்யர்களும், உபமன்னுபோன்ற குருவும் அகப்படுவது அரிது. அதனாற்றான் இரண்டாவது ஒற்றுமை நிலைபெறும். மூன்றாவதோ இல்லறவாழ்க்கையில் விருப்பமற்று மோக்ஷத்தை விரும்பும் துறவிகளிற் குருவுக்கும் சிஷ்யர்களுக்குமுள்ளது. அதில் குருவின் பிரசங்கம் சிஷ்யனுள்ளத்தைக் கவருமென்றறிக. இதில் முதல்வகுப்பில், உலகத்தில் மனிதர்கள் எல்லோரும் அதிகாரிகள். ஆதலால் அதில் ஆவசியகம் மூய

[illegible]

லவேண்டும். இரண்டாவதோ பண்டிதர்களுக்கு இன்றியமையாத தொழில் நம்தேசங்களுக்கும், மதங்களுக்கும் பெரும்புகழ். அதற்கு நம்மவரே அதிகாரிகள். அதனாலுண்டாகும் பயன் நம்மவருக்குள்ளே நிலைபெறும். மூன்றாவதோ, இவருக்குள்ளடங்கியது. ஆதல்கொண்டே ஸ்ரீமத் கண்ணபிரான், முன்னர் ஸ்ரீ இராமதர்மத்தையும், பின்னர் மோக்ஷதர்மத்தையும் உபதேசித்தார் என்றறிக. உலகத்தில் தவம் புரிவோராயினும் நல்லவிடங் கிடைத்தாலொழிய அவனுக்குத்தவம் நிறைவேறாது. உலகம் இராஜநீதியால் வருந்துங்காலத்தில் அவ்வித தேசங்கிடைக்குமோ. காட்டிற்செல்லினும் நாட்டிற்கதிகமாய் அவ்விடத்தில் நிர்ப்பந்தங்களிருக்கின்றனவே. ஆதலால், நண்பர்களே! பல பிரசங்கங்களால் இராஜநீதியைச்சீர் திருத்துங்கள்! மதங்களைக்காருங்கள்! உங்களிடம் நூலறிவும், நுண்ணறிவும், பிரசங்க சக்தியும், பெரிய கல்வியுமிருக்கின்றதே. அவைகளை வீணாக்காது வெளியில் வந்து பிறருக்குபதேசியுங்கள்! ஞான விஞ்ஞானங்களை நிலை நிறுத்துவது இக்காலத்திற் பிரசங்கமொன்றே. அஃதில்லாவிடின் பொன் மலர்போன்ற முகமேனும் பொட்டைக்கண்ணாயிருந்தால் உபயோகப்படாததுபோல், மற்றொன்றும் பயன்படாது. இனி நம்மவருக்கு ஆவசியகம் வேண்டியது யாதெனில், பிரசங்க சக்தியே என்று விடையளித்து, முன்னின்று அப்பிரசங்கத்தை நிலைநிறுத்தக்கருணாகரரான கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக.

வரும்.

அறிவிப்பு.

இந்து டிராக்ட்ஸொஸைட்டி.

தாய் தந்தைகள் நெடுநாள் அருந்தவம்புரிந்து பெற்றெடுத்த பிள்ளைகளைப் பாதிரிகள் துர்ப்போதனைசெய்து வெகு சுலபமாய்க்கிறிஸ்தவராகின்றதைத் தடுக்கும் பொருட்டும், இந்துமதாபிவிர்த்தி செய்யும்பொருட்டும் 1887ஹு ஏப்ரல்மீ 27வ சென்னையில் இந்து டிராக்ட் ஸொஸைட்டியென ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதில் மெம்பராகச்சேர விருப்பமுள்ள உள்ளூரார்க்கும் வெளியூரார்க்கும் குறைந்தது சந்தா 1-4-0 இச்சங்கத்துக்குத் தருமமாகப் பொருளளிப்போர் அளிக்கலாம். இச்சங்கம் திரவியசகாயம் செய்யும் தாதாக்கள் கைகளையே நோக்குகின்றது. இந்து மதாபிமானிகள் ஒவ்வொருவரும் இதை ஆதரிக்கவேண்டும். இச்சங்கத்தில் தற்காலம் ஒவ்வொருதடவைக்கும் பதினாயிரம் வீதம் சிறு பத்திரங்கள் அச்சடித்து மெம்பர்களுக்கனுப்புவதோடு, கிறிஸ்தவரால் உபத்திரவமுண்டாகும் பலவூர்களிலும் அனுப்பி, இலவசமாகப் பரவச்செய்யப்படுகின்றன. இன்னும் அனேக காரியங்கள் செய்யவேண்டும். யாவும் பொருளாலேயே ஆகவேண்டுமென அறிந்தவிஷயமே. இதற்காக இந்து டிராக்ட் ஸொஸைட்டி தருமமென இங்கிலீஷ், தமிழ் தெலுங்கு இம்மூன்று பாஷைகளும் சேர்த்து அச்சிட்டு, ஸ்டாம்புடனே புத்தகங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. அதில் இஷ்டமான தொகைகையொப்பமிட்டு, பொக்கிஷதார் கையெழுதிட்ட ரசீதினபேரில் ஏஜெண்டுகளிடத்திலாவது, பில்கலெக்டரிடத்திலாவது பணம் கொடுக்கவேண்டியது. மற்றப்படி யாரிடத்திலும் பணம் தரப்படாது.

☞ இச்சங்கத்தைப்பற்றி யாதேனுமறிய விரும்புவோர் அனா அணு லேபிலாவது ரிப்ளைகார்ட்டாவது அனுப்பவேண்டியது.

௧௮௮௭ ஹு நவம்பர் மீ 30வ சென்னை

இங்ஙனம்
பொன்னரங்கபிள்ளை.
ஷை சங்கத்தின
அக்கிராசனாதிபதி.

Printed and Published for the Proprietor,
at the Brahmavidya Press, Chidambaram.

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்.

[illegible]

[illegible]

[illegible]

A. Krishnasami Aiyer
Pleader.
District Court, Tinnevelly.

சிதம்பரம்

ஜீவகாருண்ணிய நிரந்தர

கஞ்சித்தொட்டி யாசகதர்மம்.

இத்தருமம்இம் மார்கழிமீ அ-வ முதல் ஆரம்பிக்கப்பட்டுச் செவ்வையாகநடந்துவருகிறது. இதன் உத்தேசம் வேலைசெய்யச் சக்தியற்ற கூன், குருடு, முடம் முதலிய ஜனங்களைக் கஞ்சி வார்த்து ரக்ஷிக்கவேண்டுமென்பதே. இது ஒரு பெரிய காரியமாயினும், தீனர்களிடம் தயவுள்ள கனவான்கள் உதவியிருந்தால் நிலைபெறுமென்பதற்கு ஐயமில்லை. உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களாகவாயினும், திரவியமாகவாயினும் சகாயஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன். இது நாளது மார்கழிமாசத்திற்குள் தயவு செய்து அனுப்பவேண்டும்.

C. S. நாசய்யர்,
கஞ்சித்தொட்டி யாசகர்
சிதம்பரம்.

குதாக்காசலகுலிசம்.

வேதமூர்த்திகாள்! திற்காலம் நமது வைதிகமதங்களெல்லாம் வளங்குன்ற, கிறிஸ்துவர்முதலினோர் அதிக்கிரமித்தனர். அதுகண்டயான் "சிசுதெளத்திய திராண சண்டமாருதம்" எனவோர் கிறிஸ்துமதகண்டனம் எழுதி யச்சிட்டதுமன்றி, அவர் இங்கு தலைநீட்டுந்தோறும் எதிர்த்து நியாயதண்டத்தாற்புடைத்தும்வருகின்றேன். இந்த அல்லலுக்கிடையேநமது வைணவசிரோமணிகள் ஒருஉள்மதச்சண்டையைக் கிளப்பினுர்கள் அவர்களுடன் போர்புரிதல் எனக்கு மஹா அருவருப்பையுண்டாக்குவதால், கடைசியாகவெனது குலிசவேலையையொழிக்கநினைந்து இதைவெளியிட்டேன். பாரபட்சமற்ற வைதிகசீலர்கள் இனி இச்சண்டை கிளம்பாவண்ணம் முடிந்த விதாயகத்தை வெளியிட்டு உபகரிப்பார்களென்று நம்புகிறேன். நமது வேதோபநிஷத்துகளில் பஸ்ம ருத்திராக்ஷதாரணம் சகல தேவ ரிஷிகள் சர்வ வர்ண சர்வாச்சிரமிகளுக்கும் முகக்கிய தர்மமென்றும், மோக்ஷஹேதுவென்றும், இதைச் செய்யாவிட்டாற் பிரத்தியவாயமுண்டென்றும், பஸ்மம் எடுக்கவேண்டிய கிரமம், தரிக்கும் ஸ்தானங்கள், அளவைகள், அக்ஷரங்கள், அதிதேவதைகள், இத்தியாதி விபரங்களெல்லாம் இன்னவையென்று வெகு விரிவாய்ச் சொல்லியிருப்பவைகளை, நான் மேலோர்க்குத் தொண்டுசெய்து உணர்ந்தேன். "அகாரம்பிரஹ்மாணம்நரபெள"என்றுதொடரும் வேதவாக்கியங்களாலும், "யாஸ்யப்பிரதமாரேகா" என்றற்றொடக்கத்தாலும், விரஜாஹோமம் முதலிய விதிகளாலும் அவ்வுண்மைகள் விளங்கும். இவ்வாறுணர்ந்த நான் பலவருடம் பஸ்மதாரணமின்றிப் பாபியாய்த் திரிந்ததற்காகக் கண்ணீர்விட்டுப் பிறகு பஸ்மபரிசமின்றி யெந்த வைதிககிரியைகளும் செய்வதில்லையெனச் சங்கற்பித்து, அவ்வாறு அனுஷ்டிப்பவனுயினேன். இவ்வளவேயன்றி, நம்மவரைத் தூஷிக்கவாவது, பஸ்மந் தரிக்கும்படி யவர்க்குப் போதிக்கவாவது நான் வெளிவரவுமில்லை. அவர்களோ அநியாயமாகப் பஸ்மநிந்தனை செய்து என்னைத் தெருவி லிழுத்தார்கள். அதனுல நான் பஸ்மவைபவத்தைக் கொஞ்சம் வெளியிட நேர்ந்தது. அதுகண்ட பின்பாவது ஆறுதலடைந்தார்களா? இல்லை. எம்மை மறுக்கவெழுந்தவர், நாம் பஸ்மவிஷயத்திற் காட்டியபடியே தங்கள் திருமண்ணைப்பற்றி அது எடுக்கவேண்டிய கிரமம், தரிக்கவேண்டிய இடம், அளவு, வடிவம், அதிதேவதை, அது தரிக்காவிட்டால் நேரும் குற்றம், அது இன்னருக் குரியதென்பது என்பதாதி விபரங்களை வேதோபநிஷத்துகளில் விரித்துக்காட்டவேண்டுமல்லவா? அப்படிக் காட்டும்போதும், பரஸ்பரவிரோதமான இருவகைத்தர்மங்களை வேதஞ் சொல்லுமானுல், அவைகளில் முக்கியமும் சாமானியமுமான தர்மங்களின்னின்னவையென்று வியவஸ்தையாக்கவேண்டிய முறைமைப்படி பஸ்மதாரணத்திற்குள்ள ஆதாரங்களையெல்லாம் பூர்வபட்சமாக்கித் திருமண்வைபவத்தையே சிறந்ததாகக்காட்டி நாட்டவும் வேண்டுமல்லவா? அப்போதன்றோ எமது குலிசம் ஒடிந்துபோயிற்றென்று அவர்கள் சந்தோஷிக்கவும், நாம் அவர்களிடஞ்சென்றுமன்னிப்புக்கேட்டுக்கொள்ளவும் இடமுண்டாகும்?

மஹான்களே! இப்படிச் செய்வதொழிந்து "கோயமுத்தூருக்கு வழியெங்கேயென்றுல், கொக்கு வெளுத்திருக்கும்,, என்று விடைகொடுப்பாரைப்போல், வேறு வேறு வழிகளிற் புகுந்து வீண்வம்படித் தடிப்பதுதானு புத்திமான்களுக்கழகு? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!! வலிந்து வலிந்து வெள்ளைமண் தரிக்க ஆதாரவுண்டாமென்று சல்லடைகொண்டு அரித்துத் தேடியும்இதுவரைக்குங் கண்டுபிடித்த ஆதாரவ என்னை? சென்னையிலும்,கல்கத்தாவிலும் தெலுங்கு,நாகரம் என்னுமட்சரங்களால், நூற்றெட்டு உபநிஷத்துக்களும் அச்சிட்டிருப்பதை யாவரும் பார்க்கலாமே. அவைகளிலாவது வேறு பழம்பிரதிகளிலாவது [illegible]ண்பூச ஆதாரவுண்டா? அவற்றிலுள்ள வராக உபநிஷத்தேயன்றி அந்தப்பெயரால் வஞ்சகர் எழுதிவிட்ட போலியுபநிஷத்தொன்றைச் சோழதேசத்துள்ள பண்டிதர் பலருங் கண்டு அதற்குத்தக்க வெகுமதி செய்திருக்கின்றூர்களென்பதை அறியாதவர் யாவர்? இது ஓர்புறமிருக்க; நாம பஸ்மவைபவத்தை விளக்கவந்த அவசரத்தில் ஸ்ரீ விஷ்ணுமூர்த்திக்கும் அது தார்யமென்பதை யெடுத்தோத நேரிட்டது. அது கண்ட நம்மவர் வீண்கோபங் கொண்டாரேயன்றி நியாயங்காட்டிப் பரிகரித்தார்களா? செல்லயய்யங்காரவர்கள் விஷ்ணுமூர்த்திடைச் சிவோபாசகரென்பது அர்த்தவாதமெனக் கூறியதேபோதுமெனில், அவர் கூறிய அர்த்தவாதம் அனர்த்தவாதமாய் முடியாமல் நிலைபெற்றகாலத்திலல்லவோ அது போதும்? இது விஷயமாய் அவர்களெழுதியிருக்கிற அனேகம் பகுதிகள் உபயோகமற்ற சில்லரைகளாயிருத்தலாலும், அவற்றையெல்லாம் மறுக்கப்புகுங்கால் பத்திரிகை இடங்கொள்ளாதாதலாலும், அவர் கடைப்பிடியாக நாட்டவந்த அர்த்தவாதத்தை மட்டும் இங்கு விசாரித்துப் பரிஷ்கரித்து உபரதியடைவாம். அர்த்தவாதத்தை யெப்பிக்க அவர் கண்டுபிடித்த வசனங்கள். "[illegible]" என்பதாதி வசனங்களே. இவ்வசனங்களை இவர் இத்தனைப்பிரயாசையோடு தேடவேண்டுமா? எம்மூரில் பிரதமசிராவணமுமாகாத புதுப்பிரஹ்மசாரிகளுக்கெல்லாம் பாடமாயிருக்கின்றதே.

இதற்கு விடைவருமாறு (சிவகர்ணுமிர்தம்)

[illegible] "அங்கி கடவுளர்க்கவமன் விண்டுபரமன்" என்றற்றொடக்கத்துத் தீக்கிணீயையினைக் குறிக்கும் அருத்தவாதமும், "மாறுபாடுறினே குணவாதமாகும்,, என்னு நியாயத்தானே புனைந்துரையாகவேனும், பிறிதொன்றுகவேனும் பொருந்துதற்பாலதாய். அற்றேல், அங்கியின் அவமத்தன்மையும் விண்டுவின் பரமத்தன்மையும், அவரொழிந்த ஏனைக்கடவுளரினிடையாந்தன்மையும் வாய்மையாகாதவழி, "அங்கிகடவுளர்க்கவமன் விண்டுபரமன்,, என்று இருமருங்குள் வைத்துக்கடவுளரை யெடுத்துத்தீக்கை புரிகவென்றோதும் தீக்கிணீயைக்குச் சோமத்தில் வேட்கப்படுங்கடவுளரெல்லாரையுங் கொள்ளுந்தன்மை பெறப்படாது; பெறப்படாதாகவே "கோடற்பொருட்டாதானம் வேண்டா-முன்னையிட்டியதன் பொருட்டாகலின்,, என்னு மதிசரணத்திற்சோமவேள்வியில் வேட்கப்படுங் கடவுளரைக் கொள்ளுதற பொருட்டெழுந்த தீக்கிணீயை யென்னும் வேள்வியாற்றுனே பிரசங்கம்பற்றி அங்கவேள்விகளிலுங் கடவுளரைக்கொள்ளுதல்

பெறப்படுதலின் சோமாங்கவேள்வியிற் கடவுளரைக் கொள்ளுதற்பொருட்டு மறித்தும் அங்கியாதானஞ் செயற்பாற்றன்று, எனப்போந்த துணிபுரைக்கும சங்கிரகணகாண்டத்திற்றீக்கிணீயை வேள்வியை நிரூபித்து "அதன்றப்பியையபினேனைக்கடவுளர்க்- கைக்கொள்ளுதனுன் கேட்கப்படுமே,, எனுமதிகரணத்தில் "தீக்கிணீயையிற்கொள்ளப்பட்ட கடவுளர்கு ஆரோபிதசம்ஸ்காரஸம்பயோக முண்மையின் சோமவேள்வியிற் றீக்கிணீயையிலாதானஞ் செய்யப்பட்ட வங்கிசோமப் பொருட்டோம்பப்படும் கருமங்தோறு மாதானம் வேண்டற்பாற்றன்று,, எனப்போந்ததுணிபுரைககும்வாதையுண்டாம் பிறவெனின்;—அற்றன்று, "அங்கி கடவுளர்க்கவமன் விண்டுபரமன,, என்புழி வலியுடையவனேக சுருதிகளின் விரோதம் வருதலானும், உபசரிதப்பொருள் கொள்ளுமிடத்தும் தீககிணீயை வேள்விக்குக் கடவுளரைக் கொள்ளுதல் பயனுமென்னும் பொருட்கு விரோதமின்மைபற்றித் தனபொருட்கட் பிரமாணமாதலொப்பப்படுதலானுமெனக. அஃதேல், அங்கிக்கும் விண்டுக்கும் தாழ்ச்சி உயர்ச்சி சிலவழி இருமருங்கு ளடக்கிக்கொள்ளுதல் பெறப்படாமையின் கடவுளரெல்லாரையுங் கொள்ளுதல் செல்லாதாலோவெனின்;—அற்றன்று, அவ்விருவர் தாழ்ச்சி யுயர்ச்சி வரம்புபற்றி அவர்தம்மைக் கொள்ளுதல் பெறப்படினும், அப்பேறின்மை அவ்வண்ணமே நிலையுதலின், தாழ்ச்சி யுயர்ச்சியுடைய விரு கடவுளர் வேள்விட்ற்றி அவரிடைப்பட்ட வேனைக்கடவுளரைக் கொள்ளுதல் பெறப்படாமையினென்க. இனி வசனவலியானே இருபாலாரைக் கொள்ளுதல்பற்றி எல்லாக்கடவுளரையுங் கொள்ளுதல் பெறப்படுமெனின்;—அங்ஙனமாயின் வசனவலியானே அங்கி விண்டுவென்பார் வேள்விசள்பற்றிக் கடவுளரெல்லாரையுங் கொள்ளுதல் பெறப்படுமென்றும். "சூர்ப்பத்தானே யோமித்திடுக- வதனுனன்றே யன்ன மடப்படும்' என்புழிச் சூர்ப்பத்தின்கண் அன்னகரணத்தன்மை துதிபற்றியன்றி அஃதோமசாதனமானவன்னத்திற்குபயோகமாதல்பற்றியன்று; அதுபோல, அங்கிக்கும் விண்டுக்கும் அவமத்தன்மை பரமத்தன்மை கூறியதூஉம் துதிபற்றியன்றி ஏனைகடவுளரைக் கொள்ளுதற் குபயோகமாதல்பற்றி யன்றென்று கொண்டு, விரோதமென்றுமின்றென்க. இனி உண்மையாக நோக்கும் வழி ஈண்டை 'அவம' 'பரம' சத்தங்கள் தாழ்ச்சி உயர்ச்சிகளையுணர்த்தவந்தனவல்ல. மற்றென்னையோ வுணர்த்தவந்தனவெனின்;—முடிவு முதலு முணர்த்தவந்தனவென்க; "அங்கி கடவுளர் தொகுதிக்கு முன்னைப் பிரதமன் விண்டு உத்தமன்,, என்று தீககிணீயைக்குக்கடவுளரைக்கொள்ளுதலைப் பயனென்றுணர்த்தற்கே யெழுந்த மந்திரத்தின்கண்ணுள்ள 'பிரதமன்' 'உத்தமன்' என்னும் பதங்களான் அவ்வாறு வெளிப்படுதலின், ஆண்டை உத்தமபதத்திற்குப் "பிரதவிருக்கினை மும்முறை கூறுக,, வென்வபுழிப்போலப்பிரதமபதத்தொடர்ச்சிபற்றி அதற்கு மறுதலையான கடைமைப்பொருள்போதலானும் "கடவுளர்க்குப் பிரதமனன அங்கி வருக,, "கடவுளரின் முகமு முதல்வனுமான வங்கி,, "அங்கியைமுகமாகவுடைய கடவுளர்,, என்றற்றொடக்கத் தனேகமந்திரப்பிரமாணங்களில், அங்கிக்கு முதன்மைகூறப்படுதலின் "அவம,, பதத்திற்கு யாங் கூறிய பொருளேயின்றியமையாதுமென்க. இன்னும்வரும்.

சாமக்குளம், வெங்கடரமணதாசர் என்கிற,

[illegible]

பாகவதத்தைப் பத்திரிகையிற் பதித்தல்.

ஐயா,—தங்கள் அரிய பத்திரிகையின் கருத்து வேதாகம புராண விதிகாச சரித்திரங்களில் இலைமறைவு காய்மறைவாயுள்ள நுண்ணிய பொருள்களை வெளியிடுதற்கும், அருமையான உபந்நியாசங்களைப் பிரசித்தப்படுத்தற்கும், ஸம்ஸ்கிருதபாஷையின் மேன்மையைத் தீட்டுதற்கும், மதங்களையும் அவற்றின் பிரயோசனங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் வரிதற்கும், நவீனசமயங்களைக் கண்டித்தற்கும், நாஸ்திகத்தை நாஸ்தி செய்வதற்கும் அன்றி வேறல்ல. அங்ஙனமாக, பாரத கதை பாகவதீகதை இராமாயணகதை காந்தகதை வரைந்து பத்திரிகையை நிரப்புவதற்கன்று. இக்கதைகள் தனித்தனி வசன ரூபங்களாக விரிவாகவும் சுருக்கமாகவும் அச்சிட்டு விற்கின்றன. வேண்டியவர்கள் அவற்றை வாங்கிப்படிக்கலாம். சிதம்பரம் மலைக்குடி ரா. ஸ்ரீஹாலாஸ்யநாதசாஸ்திரிகள் அவர்கட்கு இஷ்டமிருக்கின் தனியே அச்சிட்டு ஒரு புத்தகரூபமாக வெளியிடலாம். அல்லதூஉம் பத்திரிகையோடு அனுபந்தமாக வனுப்பி வரலாம். இங்ஙனஞ் செய்வதைவிட்டுப் பத்திரிகையின் பாதிப்பங்கைப் பாகவதத்தாற் பரப்பிவிடல் அழகன்று. பத்திரிகாசிரியர் இதைப்பற்றிக் கூர்ந்து ஆலோசிக்கவேண்டுகின்றனன்.

இங்ஙனம்
பத்திரிகாபிமானி.

ஏசுக்கிறிஸ்து மனிதனே.—இப்பெயர்வாய்ந்த புத்தகம் ஒன்று சென்னை இந்து டிராக்ட் சொஸைட்டியின் ஓர் மெம்பரால் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. இதிலே கிறிஸ்துவென்பவன் சாமானிய மனிதனேயன்றிக் கிறிஸ்தவர் சொல்லிக்கொள்ளுகிறபடி கடவுளல்லவென்பதை, அவர்கள் பைபிலிலுள்ள பல ஏதுக்களைக்கொண்டே நாட்டப்பட்டிருப்பதுமன்றி, அவ்வேசுக்கிறிஸ்துவின் வரலாற்றையும், அம்மதம் உண்டானவழியையும், கிறிஸ்தவர் அம்மதம் பரவுதற்பொருட்டுப் பலவிடங்களிலேசெய்த மோசங்களையும், சொல்லற்கரிய பல கொடுமைகளையும், பின்னும் அதன்வரலாறுகள் பலவற்றையும் வெள்ளிடைமலைபோல் எடுத்துக் காட்டப்பட்டுமிருக்கின்றது. இவ்வரிய புத்தகத்தை நம்மவர் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து அதன் உண்மையை யுணர்தலோடு பிறர்க்கும் உணர்த்துதல் இன்றியமையாக்கடனும். இப்படிப்பட்ட நன்மைகளைச் செய்வதே தமக்குரிய கடனாக்கொண்டு பிரயாசைப்பட்டுவரும் அச்சொஸைட்டி நீடூழிவாழக்கடவுள் அருள்புரிவாராக. அதில் ஒன்று எமது பார்வைக்கு அனுப்பிய அச்சபையார்க்கு வந்தனம். அதன்விலை டை-6.

இதனைபபெற விரும்புவோர் சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டி வீதி உ௫௫- நெ. வீட்டில் சை. நமசிவாய செட்டியாரிடமும், சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

விசேஷ அறிவிப்பு

நாம் முன் இப்பத்திரிகையை மாதம் இருமுறை பிரசுரிக்க வேண்டிய விஷயமாய்ச்சில எழுதியிருந்ததைக்கண்ட நம் நண்பர்களிற் சிலர் அவ்வாறே இருமுறையாக்குதல் அத்தியாவசியகமெனத் மதரிவித்திருக்கின்றனர். ஏனையோரும் அதுவிஷயத்தில் தத்தமபிப்பிராயங்களை வருகிற கஅஅ௮-ஆ பிப்ரவரி மாசத்திற்குள் தெரிவிக்கக்கோருகின்றோம்.